விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 24 சனிக்கிழமை (09.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 255

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# சம்பூரிலிருந்து வெளியேறாவிட்டால் தாக்குதல் நடத்த வேண்டி ஏற்படும்!

## புலித்தேவன் அரசிற்குத் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

சம்பூர் பகுதியிலிருந்து இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும். தவறின் போர் வெடிக்கும் என தமிழீழ விடுதலைப் புலிகள் அரசிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீ. புலித்தேவன் ரொய்டர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது. *(04 ஆம் பக்கம் பார்க்க)*

## முகமாலை முன்னரங்கப் பகுதியில் புலிகள் ஆட்லறித் தாக்குதல்கள்

### 3 இராணுவத்தினர் பலி; 15பேர் காயம்

முகமாலை இராணுவ முன்னரங்கப் பகுதிகள் மீது விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதனை இராணுவ ஊடகப்பிரிவு உறுதி செய்துள்ளது. நேற்று முன்தினமிரவு தொடர்ச்சியாக முகமாலை இராணுவ முன்னரங்கப் பகுதிகளை நோக்கி விடுதலைப்புலிகளால் ஆட்லறித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் பகுதிகள் மீது இராணுவத்தினர் ஆட்லறி மற்றும் பல்குழல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## அச்சுவேலியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.கடந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் மீது கிரனைட் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நேற்றுக்காலை 8.10 மணிக்கு இராணுவத்தினர் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஒரு இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## 3,800 தொன் உணவுப் பொருட்களுடன் "மாஸ் றுகுணு" காங்கேசன்துறையில்!

### மக்களுக்கு வழங்க விரைந்து நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை முகத்திலிருந்து மூவாயிரத்து 800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்ட மாஸ் றுகுணு கப்பல் நேற்றுக் காலை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

யாழ்.மக்களுக்குத் தேவையான அரிசி, மா ,சீனி உட்பட அத்தியாவசியப் பொருட்கள் இக் கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மூன்று மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் நோக்குடன் உணவுப் பொருட்களை ஏற்றிய கப்பல்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலிலிருக்கும் உணவுப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.-ஜனாதிபதி சந்திப்பு வெற்றியாம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே நேற்று நடைபெற்ற முக்கிய சந்திப்பு வெற்றியளித்துள்ளதாக இரு தரப்பும் அறிவித்துள்ளன.

இச் சந்திப்புத் தொடர்பாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட மற்றும் ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல்வீரவன்ச ஆகிய இருவரும் இவ் அறிவிப்பை (04 ஆம் பக்கம் பார்க்க)

## 800 பயணிகளை ஏற்றிக் கொண்டு இன்று அதிகாலை கப்பல் புறப்படும்

### காங்கேசன்துறையில் இருந்து

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து 800 பயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று இன்று அதிகாலை திருகோணமலை நோக்கி புறப்படுகிறது.

இதில் தென்னிலங்கையில் பயணியாற் றும் அரச உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், வெளிநாட்டுப்பிரஜைகள் மற்றும் வைத்தியர்கள் உட்பட 800 (04 ஆம் பக்கம் பார்க்க)

## வதிரியில் பெண் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

வதிரி மேற்கு திக்கம் பகுதியில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மாக்செஸ் ஜெயச் சித்திரா (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

## மாலுச்சந்தியில் சிறுவன் நேற்று சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் சிறுவன் ஒருவர் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.அல்வாய் கிழக்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் துவாரகன் (வயது 17) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மாலுசந்தி பிள்ளையார் கோயில் பகுதியில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்பவ (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிமார் கோயிலடியில் ஒருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் நகைக்கடை உரிமையாளர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கடைவாசலில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டையை சேர்ந்த விஸ்வலிங்கம் சற்குணேஸ்வரன் (வயது 25) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அரசடிப் பகுதியில் அவரது நகை கடையில் வைத்து இன்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனைக்கோட்டையில் இளைஞனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பொன்னையா வீதியில் நேற்றுக் காலை சுடப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தலையில் வெள்ளைத்துணியால் சுற்றப்பட்டு சுடப்பட்டநிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டதுடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படாவிட்டால் அரச பணிகளையும் முடக்க வேண்டி ஏற்படும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும். அதனை ஏற்படுத்தத் தவறும் பட்சத்தில் அரச பணிகளை முடக்கி போராட்டத்தில் ஈடுபட வேண்டி ஏற்படும் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை வருமாறு;

தமிழ்மாணவர்களின் ஒருமித்த சக்தியாக திகழ்கின்ற தமிழ் மாணவர் ஒன்றியமானது குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இயல்பு நிலை குழப்பங்களோடு மாணவர்கள் கற்கக் கூடிய அடிப்படைச் சூழல் கூட இல்லாத நிலையில் எமது எதிர்காலம் கருதி குடாநாட்டில் இயல்பு நிலையினை ஏற்படுத்த வேண்டுமென (இன்று முதல்) பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

மாணவர்களுக்கு எதிராக அரசும் அதன் செயற்பாட்டாளர்களும் அராஜகச் செயற்பாடுகளின் வெளிப்பாடாக உதித்த தமிழ் மாணவர்ஒன்றியம் பல வருடங்களாக மாணவர்களின் உரிமைக்காக குரல் கொடுத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல செயற்திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றது.

எந்தவித அரசியல் கலப்பற்ற, சுதந்திரமாகக் கற்கத் துடிக்கின்ற மாணவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற அமைப்பு என்பதை பள்ளி செல்கின்ற பாலகர் முதல் பல்கலைக் கழக மாணவர்கள் ஈடாக ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களும் நன்கறிவார்கள்.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் வழிநடத்தலில் பல்வேறுபட்ட மாணவர் அமைப்புக்கள் எமது மாணவர்களுக்காக குரல் கொடுத்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் குழப்பங்களுக்கு மத்தியில் மாணவர்களால் கல்விச் செயற்பாட்டினைத் தொடர முடியாத சூழலில் தமிழ் மாணவர் ஒன்றியம் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது.

மேற்படி எமது அழைப்பினை நிராகரிக்கும்படி 'சுதந்திர மாணவர் ஒன்றியம்' என்ற அமைப்பு (நேற்றிரவு) ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றைக் கொடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் மதிகெட்ட முட்டாள்கள் அல்ல. அடிமைகளாக அடிபணிந்துபோபவர்களும் அல்ல. அரச தடை போட்ட பிறகெல்லாம் குப்பி விளக்கில் குனிந்து குனிந்து படித்துச் சாதனை படைத்தவர்கள். மர நிழலில் பள்ளிக் கூடங்கள்நடத்தினார்கள். அரச எண்ணம் நிறைவேறாத வகையில் சாதனைகளைத் தொடர்ந்து நிலை நாட்டினார்கள்.

இன்று அச்சுறுத்தல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து மக்களையும் தம்மையும் காப்பாற்ற வேண்டிய கடமை மாணவர்களிடமேயுண்டு.

மாணவர்களை அச்சுறுத்தி குடாநாட்டை திறந்தவெளிச் சிறைச்சாலையாக்கி மக்களை வேட்டையாடியும் பட்டினி போட்டுக் கொல்லவும் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

தினமும் எம் உறவுகளின் குருதியால் குடாநாடு நனைந்த வண்ணம் உள்ளது. உலகத்தில் என்றும் இல்லாதவாறு மாணவர்கள் கேவலமாக நடத்தப்படுகின்றார்கள். மனித உரிமைகளை அணுவளவேனும்மதித்து நடக்கின்ற பக்குவம் ஏற்படுத்தப்படவில்லை.

பாடசாலை நடைபெறுகின்ற வேளையில் சுற்றிவளைப்பு, கைது நடவடிக்கைகள் போன்றவையை மேற்கொள்ளும் இராணுவம் பாடசாலை மாணவர்களை அச்சுறுத்தும் விதமாக பாடசாலைச் சூழலில் நிலைகொண்டுள்ளது. இந்நிலையில் மாணவர்கள் கல்வியைத் தொடர்வது எப்படி?

அரசாங்கம் வடக்குக் கிழக்கு எங்கும் வன்முறையைத் தூண்டிவிட்டு யுத்தத்தை ஆரம்பித்து மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஏ-9பாதை திறக்கப்பட்டு குடாநாட்டில் பஞ்சம் நீங்க வழிசெய்து தொழிலாளர்கள் பட்டினியைப் போக்கி ஊரடங்கால் அடங்கிப் போயுள்ள மக்கள் இயல்புக்குத் திரும்ப வழி செய்ய அனைவரும் முன்வர வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் அரசுக்கும் இராணுவத்துக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனை ஏற்படுத்தத் தவறும் தறுவாயில் அரச பணிகளை முடக்கிப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

யாரும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கத் தேவையில்லை. அந்தளவுக்கு கிணற்றுத் தவளைகளோ முட்டாள்களோ அல்ல தமிழ் மாணவர்கள்.

சரி எது பிழை எது எனப் பிரித்தறியும் பகுத்தறிவு அவர்களுக்கு உள்ளது.(இன்றைய தினம்) பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய ஒட்டுமொத்த கல்வி சமூகத்திற்கு நன்றியைத் தெரிவிப்பதோடு மேற்கொண்டு எமது போராட்டம் தொடர ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர்களாகிய நாம் வேண்டுகின்றோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## கிளைமோரில் இருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் செங்கலடியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் பொது மகன் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடியில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதியில் கிடந்தபொதி ஒன்றை சோதனையிட முற்பட்ட போது இக் கிளைமோர் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு நெதர்லாந்து அரசு உதவி

இலங்கையில் வடக்கு-கிழக்கில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்காக ஒரு மில்லியன் யூரோவை ஒதுக்கீடு செய்துள்ளதாக நெதர்லாந்து அறிவித்துள்ளது. கொழும்பிலுள்ள நெதர்லாந்துத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.இந் நிதியானது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பின் ஊடாக வழங்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அடையாள அட்டை பெற்றுக் கொள்ளவும்

தோப்புக்காடு காரைநகரைச் சேர்ந்த மாதர்குலம் தீபன் என்பவரது தேசிய அடையாள அட்டை வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ச)

## எரிபொருள் தட்டுப்பாட்டால் சுகாதாரப் பணிகள் பாதிப்பு!

### யாழ்.மாநகரசபை ஆணையாளர் கவலை

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டால் சுகாதாரப் பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள முடியவில்லை என யாழ்.மாநகரசபை ஆணையாளர் எஸ்.சரவணபவ கவலை தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன்போது ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை கண்காணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வழமையான சூழ்நிலையில் இக் கண்காணிப்புக்கு 14 வாகனங்கள் பயன்படுத்தப் பட்டன. தற்போது இவ்வாகனங்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடையில் தரமற்ற உலர் உணவு விநியோகம் செய்யப்படுகிறது தொடர்பாக கேட்ட போது யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் தரமற்ற உலர் உணவு விநியோகம் இடம் பெற்றால் அது குறித்து தனக்கு அறிவிக்குமாறும் அதன் பின்,தான் நடவடிக்கை எடுப்பதாகவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ச-133)

## பிரதி கடற்படைத் தளபதி யாழ்ப்பாணம் விஜயம்

பிரதிக் கடற்படைக் கொமாண்டோ அட்மிரல் வசந்த கரணகொட நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

காங்கேசன்துறைக்குச் சென்று அங்கு பாதுகாப்பு நிலைவரம் பற்றி ஆராய்ந்தார். அதேவேளை ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதிகளுக்கும் சென்று பாதுகாப்பு நிலைவரம் பற்றியும் மக்களின் தேவைகள் பற்றியும் ஆராய்ந்தார்.

மேலும் தீவுப்பகுதிப் பொது மக்கள் தமக்கு உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவித்த முறைப்பாட்டையடுத்துக் கடற்படையினர் கடல் மார்க்கமாக உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதை உறுதியளித்துள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (ச)

## கிருமிநாசினி விபரீதம் 73 மாணவிகள் மயக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் கிருமிநாசினியால் ஏற்பட்ட விபரீதத்தில் 73 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உப்போடைப் பகுதியிலுள்ள விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் உள்ளவர்கள் தென்னை மரங்களுக்கு கிருமிநாசினி தெளித்துள்ளனர்.

முறையான கலவைகளின்றி அதீத அளவு இரசாயனப் பதார்த்தங்கள் கொண்டு இது தெளிக்கப்பட்டமையின் காரணமாக நேற்றுக் காலை 8 மணியளவில் பாடசாலைக்கு வந்த மாணவிகள் பலர் மயக்கமடைய ஆரம்பித்ததையடுத்து அவர்கள் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனை தொடர்ந்து முன்எச்சரிக்கை நடவடிக்கையாக பாடசாலை நிர்வாகத்தினர் பாடசாலையினை உடனடியாக மூடி மாணவர்களைப் பாதுகாப்பாக வீடு செல்ல வைக்க முயற்சி செய்துள்ளனர்.

இந்நிலையில் வீடு செல்லும் வழியில் பல மாணவிகள் மயக்கமுற ஆரம்பித்ததாகவும் அவர்களையும் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அப்பகுதி மக்கள் அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் அந்தப் பகுதியில் வாழும் அயலவர்கள் பத்துப் பேரும் இதேபோல் மயக்கமுற்றதாகவும் அவர்களும் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வழக்கை விசாரிக்க ஐவர் கொண்ட குழு

வடக்குக் கிழக்கைப் பிரிக்குமாறு கோரி ஜே.வி.பி. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரிக்க ஐவர்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான இக் குழுவில் நிகால் ஜெயசிங்க, நிஷங்க உதலகம, ராஜா பெர்னாண்டோ மற்றும் நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவ் மனு மீதான விசாரணைகள் எதிர் வரும் 15 ஆம்திகதி நடைபெறவுள்ளது.(ச-5)



கோதுமை மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டையடுத்து பாண் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அதனை வாங்குவதற்காக அலைமோதிய மக்கள் [illegible] லாம்.




அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுபாடு நிலவுகின்ற இந்த நேரத்தில் யாழ். நகரில் சிலவர்த்தக [illegible]யங்களில் குடும்ப அட்டைக்கு 5 கிலோ அரிசியும் 2 கிலோ சீனியும் [illegible]. அக்க[illegible]களில் முன்னிலையில் மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்[illegible]தில் காணலாம். படம்:- திலீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதர் கோபம் அடையும்போது அவர் மனதுக்குள்ளே புயல் எழும்புகிறது. மனச்சாட்சியை அது அழித்துவிடுகிறது. - ராஜாஜி

வலம்புரி

## பெற்றோல் 'முடிவடைந்து விட்டது' அட்டை வேகத்தில் மட்டை வழங்கப்படுகிறது

உணவுப் பொருளுக்கான தட்டுப்பாட்டுக்கு மேலாக பெற்றோலுக்காக அலையும் மக்களின் நிலைமை மிகவும் கவலைக்குரியது.

'பெற்றோல் முடிவடைந்து விட்டது' என்ற வாசகங்களை தாங்கியவாறு எரிபொருள் நிலையங்கள் காட்சி தருகின்றன.

ஒரு லீற்றர் பெற்றோல் நானூறு ரூபாவுக்கு கறுப்புச் சந்தையில் விற்பனையாவதாகக் கேள்வி.

எனினும் அந்தக் கறுப்புச் சந்தை எங்கே இருக்கிறது? யாரை அணுகினால் கறுப்புச் சந்தை விலையிலாவது பெற்றோலை எடுத்துக் கொள்ளலாம் என்பது தெரியாத நிலையில்,

இப்போது பெற்றோல் வழங்குவதற்கான 'மட்டை' வழங்கும் நடவடிக்கையில் பிரதேச செயலகங்கள் ஈடுபட்டுள்ளன.

பெற்றோல் வாங்குவதற்கு நின்ற அதேஅளவு 'கியூ' பெற்றோல் மட்டைக்கு நிற்பதைப் பார்க்கும்போது நமது அதிகாரிகளின் முகாமைத்துவத் தேர்ச்சியின்மை தெரிகிறது.

பெற்றோலுக்கான மட்டையை வழங்குவதற்குத் தேவையான ஆவணங்கள் இருக்குமாயின், அவர்களுக்கான மட்டைகளை உடனடியாக வழங்கி மக்கள் அலைவதை தடுப்பது அதிகாரிகளின் கடமை.

இதற்காக பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் அடங்கிய ஐந்து, ஆறு குழுக்களை நியமித்து அந்த அட்டைகளை வழங்கலாம்.

பெற்றோல் கிடைக்கின்றதோ இல்லையோ அதற்கான பெர்மிட் மட்டையைப் பெறுவதிலேயே போதுமடா சாமி என்றாகிவிட்டது.

சில பிரதேச செயலகங்களில் கப்பலுக்குப் பதிவு செய்யும் பயணிகள் போல மக்கள் கூட்டம் நிரம்பி வழிய அட்டை ஊர்வதுபோல பெர்மிட் மட்டை வழங்கும் பணி நடைபெறுகின்றது.

நான்கு, ஐந்து நாட்களாகியும் பெர்மிட் மட்டை பெறமுடியாமல் மக்கள் அலைகின்றனர் எனில் அதற்குப் பிரதேச செயலக அதிகாரிகளின் நிர்வாகத் திறமையின்மையும் மக்கள் எப்பாடுபட்டாலும் பரவாயில்லை என்ற மனப்பாங்குமே காரணமாகும்.

அதேநேரம் கிராம உத்தியோகஸ்தர்கள் பணியிலிருக்கின்ற போதிலும் அவர்கள் மூலமாக பெற்றோலுக்கான மட்டைகள் வழங்கப்படாமைக்கான காரணம் என்ன என்பதும் ஆய்வுக் குரியது.

எதுவாயினும் மக்களை அலைய விடாது பார்த்துக் கொள்வது அதிகாரிகளின் கடமை என்பது மறுப்பதற்குரியதல்ல.

# அமைச்சர் அநுராவின் உரைக்கு சுவாமி சித்ருபானந்தா கண்டனம்

அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவினால், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிரூபமராவ் குறித்துப் பேசப்பட்ட விடயத்திற்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரத்திற்கு உயர்ஸ்தானிகர் திருமதி நிரூபமராவ் சுனாமி அனர்த்தம் காரணமாக 19 தொன் நிவாரணப் பொருட்களை ஆகாய மார்க்கமாக சென்னையில் இருந்து தருவித்துத் தந்தார்.

நாங்களும் இதனை முல்லைத்தீவு, செம்பியன்பற்று மேலும் வடமராட்சியில் கொடுக்கக் கூடியதாகவிருந்தது. சேவாச்சிரமத்திற்கு முன்னைய உயர்ஸ்தானிகர் நிருபம் சென் ஒரு வாகனத்தை அன்பளிப்புச் செய்தார்.

திருமதி நிருபம் மேனன்ராவ் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ரூபா 2 லட்சம் பெறுமதியான மருந்துப் பொருட்களும் புலோலி ஆதார வைத்தியசாலைக்குப் பலலட்சம் ரூபாவும் வழங்கியுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஓர் அரசாங்க மந்திரி பொறுப்பற்ற முறையில் பேசியமை கண்டு மிகவும் துயர் படுகிறோம். தமிழர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்பதை உயர்ஸ்தானிகர் திருமதி நிருபம் மேனன் ராவ் பல முறை அவரது சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

சேவாச்சிரமத்திற்கு அவர் இருமுறை விஜயம் செய்துள்ளார் என சுவாமி சித்ரூபானந்தாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்தியத் தூதுவருக்கு அவர் கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளார். (ச)

## சமாதானச் செயலகத்தில் அனுமதி பெறாது நோர்வேத் தூதுவர் கிளிநொச்சி விஜயம்!

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோர்வே இலங்கைக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றது. நோர்வே இலங்கையின் இறைமையை மதிக்காது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே சமாதான செயற்பாட்டிலிருந்து அந்நாட்டை உடனடியாக வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜே.வி.பி. மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கடந்த புதன் கிழமை கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துவிட்டு மறுதினமே கொழும்பு திரும்பியுள்ளார். ஆனால் ஹான்ஸ் பிரட்கர் இலங்கை அரசாங்க சமாதானச் செயலகத்திடம் அனுமதி பெறாமலேயே கிளிநொச்சி சென்றுள்ளார்.

இந்நிலையில் அவர் இலங்கையின் இறையாண்மையை மீறியுள்ளார். பிரட்ஸ்கரைச் சந்தித்து விட்டு கருத்துத் தெரிவித்துள்ள புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், இலங்கை அரசாங்கத்தை எச்சரித்துள்ளார். அத்துடன் சம்பூர்ப் பிரதேசத்தை அரசாங்கம் கைப்பற்றியமை யுத்தநிறுத்த மீறல் என்றும் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 11 ஆம் திகதி இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் தமிழ்ச்செல்வன்மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹான்ஸ் பிரட்ஸ்கர் இதனைக் கூறவைத்துள்ளார். இதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத்தடை செய்தமை தவறானது என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹான்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புலிகளையும் அரசாங்கத்தையும் சமமாக மதிப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதனை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதேவேளை அண்மையில் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேரின் கொலையுடன் அரசாங்கத்துக்குத் தொடர்பிருப்பதாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அனைத்து வகையிலும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரி நாடாக செயற்பட்டு வரும் நோர்வே இனியும் ஏற்பாட்டாளராக இந் நாட்டில் இருக்க வேண்டுமா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே அரசாங்கம் நோர்வேயை சமாதான செயற்பாட்டிலிருந்து உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுத்தாக வேண்டும். (ச)

## ஜேர்மன் நிகழ்வில் ஈழவேந்தன்

ஜேர்மன் புங்குடுதீவு மறுமலர்ச்சி ஒன்றியம் இன்று ஜேர்மனியில் நடத்தவுள்ள பூந்தென்றல் நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மா.க.ஈழவேந்தன், தமிழக விடுதலைச் சிறுத்தைகள் அணியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கென இவர்கள் இருவரும் ஜேர்மனுக்கு விஜயம் செய்துள்ளனர். ஒன்றியத்தின் தலைவர் செ.செல்வகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தமிழக இசைக் குழுவின் இன்னிசையும் இடம்பெறவுள்ளது. (ச-5)

## தொலைபேசி சேவைகள் கிளிநொச்சியில் அவுட்

கிளிநொச்சியில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மின்சாரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. அதே நேரம் அங்குள்ள தொலைபேசிகள் அனைத்தும் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏ-9பாதை மூடப்பட்டுள்ளதால் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மின்சாரத்தை முழுமையாக வழங்க் முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வைத்தியசாலைகளுக்கான மின்சாரத்தையும் மட்டுப்படுத்தியுள்ளதாகவும் கிளிநொச்சி மின்சார சபை தெரிவித்துள்ளது. இதேவேளை மின்சாரத்தடை காரணமாக கிளிநொச்சி தொலைபேசிகள் அனைத்தும் செயலிழந்துள்ளன.

இதனால் வெளியிடங்களுக்கான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ச-5)

## இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டுவரக் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்திற்கான உணவுப் பொருட்களை தென்னிந்தியாவிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு மிக விரைவாக பொருட்களை அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

கொழும்பிலிருந்து யாழுக்குப் பொருட்களை அனுப்புவதற்கு சுமார் 60 மணி நேரம் தேவைப்படுவதாகவும் ஆனால் தென்னிந்தியாவிலிருந்து பொருட்களை குறைந்தது ஐந்து மணி நேரத்தில் அனுப்ப முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு விரைவாக பொருட்களை அனுப்புவதன் ஊடாகவே பட்டினி நிலைமையை நீக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கடத்திச் செல்லப்பட்ட இரண்டு சகோதரர்கள் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

இனந்தெரியாத ஆயுத குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்ட சகோதரர்கள் இருவரும் ஏறாவூர் சவுக்கடிப் பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூர் தழுவாய் கிராமத்தைச் சேர்ந்த இரண்டுபேரே கொல்லப்பட்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட சடலங்களில் தலை மற்றும் மார்புப் பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடித் தொழிலாளர்களான இவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை சவுக்கடிக் கடலுக்குச் சென்று திரும்பும் அதேவேளை இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் கிளைமோர் ஏழுபேர் படுகாயம்!

(வவுனியா)

வவுனியா குளுமாட்டுச் சந்தியில் நேற்றுக் காலை 6.55 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 4 பாடசாலை மாணவர்கள் உட்பட 6 பேரும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்திருப்பதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆட்டோ ஒன்றில் சடலம் ஒன்று இருப்பதையும் பொதி ஒன்று இருப்பதையும் அவதானித்த பொலிஸார் அவ் ஆட்டோவுக்கு அருகில் சென்றபோது இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின்போது அந்த வழியால் சென்ற பாடசாலை மாணவர்கள் நால்வர் உட்பட ஆறு பேரும் அந்த இடத்தில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-7)



கொழும்பு செல்வதற்காக கப்பல் பதிவை மேற்கொள்ள காத்திருந்த மக்கள் (படம்:- திலீவின்பன்)

# வெள்ளை வான் குழுவால் 3 இளைஞர்கள் கடத்தல்

## ம.உ.ஆ.குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வெள்ளை வானில் வந்தவர்களால் நேற்று முன்தினமிரவு மூன்று இளைஞர்கள் கடத்தப்பட்டதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டியைச் சேர்ந்த நாகேந்திரம் மயூரன் (வயது 30),கோப்பாய் தெற்கைச் சேர்ந்த குகதாசன் கிஷோகுமார் (வயது 22) மற்றும் பழைய வீதி கோப்பாயைச் சேர்ந்த சுந்தரம் திலீபன் (வயது 24) என்பவர்களே கடத்தப்பட்டவர்களாவர் என அவர்களது உறவினர்களால் யாழ்.மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 10 மணிக்கு வெள்ளை வானில் வந்த சிலர் வீடு புகுந்து அவர்களை கடத்திச் சென்றதாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

# கடந்த மாதத்திலிருந்து 143 பேரை காணவில்லை

## ம.உ.ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல் போவோர் தொகை அதிகரித்து வருவதாக யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து இதுவரை 143 பேர் காணாமல் போயிருப்பதாகவும் அது தொடர்பாக உறவினர்கள் முறைப்பாடுகள் செய்துள்ளனர் என்றும் ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து இதுவரை 143 பேர் காணாமல் போனோர் பற்றிய முறைப்பாடுகள் எமது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 24 பேரை இராணுவத்தினரே கைது செய்ததாகவும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து எதுவும் தெரியாது என உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அனேகமானோர் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட வேளையிலும் மற்றும் இரவு வேளைகளிலுமே கடத்தப்பட்டிருக்கின்றனர் அல்லது காணாமல் போயிருக்கின்றனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அநுராவின் உரைக்கு சம்மந்தன் கண்டனம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிரூபமா ராவை விமர்சித்துள்ள அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது, இலங்கை விவகாரத்தில் இந்தியா எப்படி செயற்பட வேண்டும் என்ற அனுராவின் புத்திமதி இந்தியாவுக்கு தேவைப்படாது. உரிய விதத்தில் தான் இந்தியா இலங்கை பிரச்சினையை அணுகுகிறது.

அநுராவின் பேச்சு அர்த்தமற்றதாகும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியாவை ஓரம் கட்டக்கூடாது இந்தியாவின் உதவியைப் பெற அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் என்றார் இரா.சம்பந்தன். (ச-5)

# ஜனாதிபதியுடன் பேசுவதற்கு ஐவர் கொண்டகுழு நியமனம்

(கொழும்பு)

தேசிய ஒத்துழைப்புத் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேசுவதற்கு ஐவர் கொண்ட குழுவை அமைக்கத்தயார் என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவுடன் பேசுவதற்கு முன்னர் தானும் பிரதித்தலைவர் கரு ஜயசூரியாவும், கட்சிகள் இரண்டும் மேற்கொள்வுள்ள கலந்துரையாடல் குறித்து பேசுவதற்கு வாய்ப்பு வழங்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். (ச-5)

## ஜே.வி.பி.-ஜனாதிபதி...

ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

நோர்வேயை வெளியேற்றுதல், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்றியமைத்தல் உட்பட ஜே.வி.பியின் நான்கு நிபந்தனைகள் குறித்தே இச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது. இதில் விவாதிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தே வெளிநாட்டில் இருக்கும் ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நாடு திரும்பியதும் தெளிவுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியை அரசுடன் இணைத்தால் அரசுடன் ஜே.வி.பி. இணையமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக்கட்சி அரசுடன் இணைவது குறித்து விரைவில் ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 800 பயணிகளை...

பயணிகள் பயணிப்பதாக யாழ்.சிவில் நிர்வாக காரியாலய அதிகாரி கேணல் சில்வா தெரிவித்துள்ளார்.

இப் பயணிகள் சேவையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இர்ாணுவத்தரப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுக் காலை வானொலிகள் மூலம் இக்கப்பல் பயணம் குறித்து திடீ ரென அறிவிக்கப்பட்டது. இந் நிலையில் கப்பல் பயணத்தை எதிர்பார்த்திருந்த தென்னிலங்கை உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், வெளிநாட்டு பிரஜைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்தில் கூடினர்.

கொளுத்தும் வெயிலில் தமது பொதிகள் மற்றும் கைக்குழந்தைகளுடன் நீண்ட வரிசையில் காத்திருந்த பயணிகள் ஒவ்வொருவராக பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விசேட பஸ்ஸில் ஏற்றப்பட்டு காங்கேசன்துறைக்கு நேற்று மாலை கொண்டு செல்லப்பட்டனர்.

அவ்வாறு சுமார் 800 பயணிகளுடன் இன்று அதிகாலை காங்கேசன்துறையில் இருந்து அக்கப்பல் புறப்படுகிறது. (ச-5.133)

## அச்சுவேலியில்...

5 ஆம் திகதி காணா மல்போன யோகராஜா என்பவருடைய சடலமே மீட்கப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணை கள் இன்று நடைபெறவுள்ளது. (ச-5)

## இராணுவம்...

பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதிரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## நாச்சிமார்...

தெரியாதோரால் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-133)

## மாலுச்...

இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேதபரிசோத னையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

## ஆனைக்...

மருத்துவபரிசோதனையின் பின் அடை யாளம் காண்பதற்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

## 3,800 தொன்...

பொருட்களை விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்படும் என யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

ஊழியர்கள் மற்றும் வாகன வசதிகள் குறைவாக இருப்பதாக அவர் தெரிவித்தார். எனினும் விரைவாக அப் பொருட்களை இறக்கி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் கப்பல் இரண்டாயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, 750 மெற்றிக்தொன் மா,300 மெற்றிக்தொன் சீனி, 250 மெற்றிக் தொன் பருப்பு என்பவற்றுடன் புறப்படுவதாக கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சம்பூரில் இருந்து வெளியேறா விட்டால் ...

தொடர்ச்சியான ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களை நடத்தி திருகோணமலையின் தெற்கில் உள்ள விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டுப் பகுதியொன்றை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

2002 இல் உருவான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் ஒரு தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதியை அத்துமீறி மற்றைய தரப்பு ஆக்கிரமித்துள்ளமை இதுவே முதற்தடவை.

எங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியை ஆக்கிரமித்திருப்பதை போர்ப்பிரகடனமாகவே நாம் கருதுகிறோம்.

அவர்கள் தாமாகவே உடனடியாக வெளியேறாவிட்டால் அவர்களை வெளியேற்றுவதற்கான போரை ஆரம்பிப்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தவிர்க்கமுடியாததாக மாறிவிடும்.

ஏற்கனவே சமாதான ஒப்பந்த விதிகள் எல்லாம் மீறப்பட்டுள்ள நிலையில் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மிகமோசமான விளைவுகளையே உருவாக்கும்.

தமிழர் தாயக பிரதேசங்களான வடக்கு - கிழக்கின் பல பாகங்களிலும் போரின் தாக்கம் பரவலாக உணரப்படுகிறது.

இருப்பினும் முடிந்தவரை விடுதலைப் புலிகள் வலிந்த தாக்குதல்களை தவிர்த்து பொறுமை காக்கிறார்கள். ஆனால் எதற்கும் ஒரு எல்லை இருக்கிறது.

யுத்த நிறுத்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பும் யுத்த நிறுத்த வரையறைகளை மதித்து தொடர்ந்தும் அதை மதித்து நடப்பதாகவும் வலிந்த தாக்குதல் எதனையும் தொடுக்க வில்லை என்றும் கூறிவருகின்றனர்.

ஆனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை வலிந்த தாக்குதல் மூலம் தற்போது சிறிலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிற்பது மிக அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் மட்டுமல்ல அது ஒரு போர்ப் பிரகடனமும் கூட.

நோர்வே நாட்டுத் தூதுவர்களைச் சந்தித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனை தெளிவாக விளக்கியிருக்கிறார்.

1983 இல் இருந்து இன்று வரை ஏற்கனவே 65 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களை கொன்றொழித்த போரை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென விரும்புகிறது இலங்கை அரசு.

தமிழ் மக்கள் தற்போது தாங்கொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இதற்கான விளைவுகளை சிங்கள மக்களும் அனுபவிக்க நேரிடும் என்ற எச்சரிக்கையை சு.ப.தமிழ்ச்செல்வன் விடுத்திருக்கிறார்.

ஆக்கிரமித்த பிரதேசங்களை விட்டு சிறிலங்காப் படைகள் உடனடியாக வெளியேறாது விடின் அவர்களை வெளியேற்றுவதற்கான யுத்தம் ஒன்றை விடுதலைப்புலிகள் தொடுக்க நேரிடும் என்றும் சீ.புலித்தேவன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org